1973 நவம்பர் 27]

பி கிரேட், 100-க்கு 50-வது இருந்தால்தான் அவர்கள் இன்டர்வியூவுக்கு, பேட்டிக்கு அழைக்கப்படுவார்கள் என்று மாற்றப்பட்டது. ஆனால், அப்படி வைத்தும் 850 பேர் வந்திருக்கிறார்கள் 120 இடங்களுக்கு. அவ்வளவு பேரையும் அழைத்து, மாணவர்களுடைய நேரத்தையும், அவர்களைத் தேர்ந்தெடுக்கும் குழுவினுடைய நேரத்தையும் வீணாக்க வேண்டாமென்று கருதுகிறேன்.

கிழாய் ஊராட்சியில் கால்நடை மருத்துவ மனைக் கட்டடம்

*438 **திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தொகுதியில் கிழாய் பஞ்சாயத்துப் பகுதியில் கால்நடை மருத்துவமனை கட்டும் பணி எப்போது துவங்கப் பட்டது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : 1971-ம் ஆண்டு சனவரி மாதம் தொடங்கப்பட்டது.

ஒன்றியப் பள்ளிகளில் சுகாதார வசதிகள்

*439 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் சுகாதார வசதி அளிக்க அரசு திட்டமிட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) & (இ) ஊராட்சி ஒன்றிய பொது நிதியில், மூன்று இலட்ச ரூபாய்களுக்கு மேல் உபரி நிதி இருக்கும் ஊராட்சி ஒன்றியங்கள் அவற்றின் பொது நிதியிலிருந்து பள்ளிகளில் கழிப்பிடங்கள் கட்டுவதற்கு அனுமதி அளிப்பது பற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, பரிசீலனை எப்பொழுது முடியும்? ஆரம்பத்தில் எத்தனை பள்ளிகளுக்கு இந்த வசதி வாய்ப்பளிக்க அரசு திட்டமிட்டுள்ளது என்று அறியலாமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டமே காந்தி நூற்றாண்டு விழாவினையொட்டி, அங்கங்கே இப்படிப்பட்ட காரியங்களைச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. எனவே, அது இப்பொழுதுதான் புதிதாகத் துவங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. நா. வே. குருசாமி : தலைவர் அவர்களே, இந்த மாதிரி ஊராட்சி ஒன்றியங்களில் நடத்தப்படும் பள்ளிகள் எந்த முறையில் இருக்கும்? உயர் துவக்கப் பள்ளியில் ஆரம்பிக்கப் படுமா, அல்லது ஆரம்பப் பள்ளியில் ஆரம்பிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : உயர் துவக்கப் பள்ளி, ஆரம்பப் பள்ளிகள், இரண்டுக்கும்.

திரு. தி. பொன்னுமலை : தலைவர் அவர்களே, பல கிராமங்களிலே பள்ளிக்கூடங்களில் கூரையில் பொத்தல், சுவர்களில் பொத்தல்; இவற்றிலிருந்தும் சுகாதாரமற்ற முறையிலே அப்படிப் பட்ட நிலையிலே பிள்ளைகள் படிக்க வேண்டி இருக்கிறது. அப்படிப்பட்ட குறைபாடுகளை உடனடியாக நிவர்த்திக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அப்படிப்பட்டவற்றிற்கு ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து செலவு செய்து கொள்வதற்கு ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

குருந்தங்குளம் கிராம வருவாய்

*440 வினா—**திரு. த. சோனையா :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், வீரனேந்தல் பஞ்சாயத்தில் சேர்ந்து இருக்கும் குருந்தங்குளம் ரெவின்யூ வரி அனைத்தும் பழையனூர் பஞ்சாயத்திற்குப் போய் சேர்ந்துவிடுவது உண்மையா?

(இ) பழையனூர் பஞ்சாயத்தோடு குருந்தங்குளம் கிராமத்தைச் சேர்ப்பது பற்றி அரசுக்கு உத்தேசம் உண்டா?